விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 19 சனிக்கிழமை (03.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 74

ராம்கோ சிமெந்து
RAMCO CEMENT
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

## இராஜதந்திரிகளின் உயிராபத்துக்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலரே காரணம்

### மங்கள சமரவீர குற்றச்சாட்டு



(கொழும்பு)

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் தாக்குதல் இடம்பெற்ற பகுதி மிகவும் உயரதிகாரிகள் செல்லக் கூடிய பாதுகாப்பான பகுதியல்ல.

எனவே பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவே இராஜதந்திரிகளுக்கு உயிராபத்தை விளைவிக்கக் கூடிய இந்தத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சரான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அண்மையில் படையினரால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் மூலம் கிழக்கில் இருந்து விடுதலைப்புலிகளை வெளியேற்றி விட்டோம் என பாதுகாப்பு அமைச்சரும் செயலாளரும் கூறிக்கொண்டிருக்கும் போது, தங்களிடம் நீண்ட தூர ஆட்லறிகள் இருப்பதை விடுதலைப்புலிகள் நிரூபித்திருக்கின்றனர்.

பாதுகாப்பு நிலை (04 ஆம் பக்கம் பார்க்க)

## களுவாஞ்சிக்குடியில் கிளைமோர் மீட்பு

(கொழும்பு)

அம்பாறை களுவாஞ்சிக்குடி வீதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கிளைமோர்க் குண்டு ஒன்றை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் நேற்றுக் காலை கண்டுபிடித்துள்ளனர்.

இக் குண்டு ஆறு கிலோக்கிராம் இடையைக் கொண்டது என்று தேசிய பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்புப் படையினரை இலக்குவைத்துத் தாக்குதல் நடத்துவதற்காக குண்டு மறைத்து வைக்கப்பட்டிருந்ததாகத் தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.

(ச-3)

## வரணி இயற்றாலையில் இளைஞன் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

வரணி இயற்றாலையில் நேற்று அதிகாலை நள்ளிரவு 12.30 மணியளவில் ஆயுததாரிகளால் இளைஞர் ஒருவர் வீட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் வேலுப்பிள்ளை சிவகுமார் (வயது-27) என்ற இளைஞனே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நல்ல சந்தர்ப்பம் கிட்டியுள்ளது

### இராணுவத் தீர்வு சாத்தியமற்றது என்கிறார் அமெ.தூதுவர்

(கொழும்பு)

சமாதானத்தை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல்களைத் தடுக்க முடியும். நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசுக்கு நல்லதொரு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதனைத் தவறவிடக் கூடாது என அமெரிக்கத் தூதுவர் றோபேட் ஓ பிளேக் தெரிவித்துள்ளார். (04 ஆம் பக்கம் பார்க்க)



## இந்திய பட்ஜெட்டில் இலங்கைக்கு 105 கோடி

(சென்னை)

இந்திய மத்தியஅரசின் வரவு செலவுத் திட்டத்தில் இலங்கைக்கான உதவியாக 105 கோடி ரூபா அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாடுகளுக்கு வழங்கப்படும் நிதியுதவித் திட்டத்தில் இலங்கைக்கு 77 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தொழில் நுட்பம் மற்றும் பொருளாதார ஒத்துழைப்புப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவனின் உடலை கிளி.கொண்டு செல்ல நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவனின் உடலை கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்வதற்கு அனுமதியளிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பாதுகாப்பு அமைச்சரைக் கோரியுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகக் கலைப்பீட மாணவன் செல்வரத்தினம் சிவரஞ்சனின் உடலை தன்னிடம் ஒப்படைக்குமாறு அவரது தாயார் பல்கலைக்கழகத் துணைவேந்தரிடமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இக் கோரிக்கை (04 ஆம் பக்கம் பார்க்க)

## மேலதிக பாதுகாப்பு வழங்குமாறு இராஜதந்திரிகள் வேண்டுகோள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள நான்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் தமது தூதுவராலயங்களுக்கு மேலதிக பாதுகாப்பை வழங்கும்படி அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக சகல வெளிநாட்டுத் தூதுவர்களையும் வெளிவிவகார அமைச்சில், அமைச்சர் றோகித போகொல்லாகம நேற்றுச் சந்தித்துக் (04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக முதல்வருடன் ஆனந்தசங்கரி சந்திப்பு

(சென்னை)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழக முதல்வர் மு. கருணாநிதியைச் சென்னையில் சந்தித்துப் பேசியுள்ளார்.

இச் சந்திப்பின் போது இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்திய மாதிரியிலான அரசியலமைப்பு முறையின் கீழ் தீர்வு காணப்பட (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவு. உயர்பாதுகாப்புப் பகுதியில் நேற்றுக் கிளைமோர்த் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா உயர் பாதுகாப்புப் பகுதியான ஈரப்பெரியகுளத்தில் பொலிஸ்நிலை மீது நேற்றுக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஈரப்பெரியகுளம் புகையிரத நிலையத்தில் உள்ள பொலிஸ்நிலை மீது நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இக் கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலின் போது ஊர்காவற்படையைச் சேர்ந்தவரும் பொலிஸைச் சேர்ந்தவருமாக இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

வவுனியா இராணுவத் தலைமையகமும் விமானப் படைத் (04 ஆம் பக்கம் பார்க்க)

## தொப்பிக்கலப் பகுதியில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)

மட்டக்களப்பு தொப்பிகலப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட இலக்குகள் மீது விமானப் படையினர் தாக்குதல்களை நடத்தியுள்ளதாகத் தேசியப் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் ஒன்றுகூடும் இடமொன்றை இலக்கு வைத்து இத் தாக்குதல் நடத்தப்பட் (04 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் இருந்து புலிகள் ஆயுதங்களைக் கடத்தவில்லை

### -சிவாஜிலிங்கம் எம்.பி.



(சென்னை)

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு ஆயுதங்களையும் ஆயுதம் தயாரிக்கும் பொருள்களையும் விடுதலைப்புலிகள் கடத்தவில்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் சென்னையில் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுக்காக தமிழகத்தில் இருந்து ஆயுதங்களைத் தயாரிக்கக் கூடிய மூலப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கை இராணுவம் கைப்பற்றியிருந்தால் தூதுவர்கள் எவ்வாறு தாக்கப்பட்டனர்

### ஐ.தே.க.கேள்வி

(கொழும்பு)

அரசாங்கம் திட்டமிட்டு யுத்தத்தினை மேற்கொள்ளவில்லை. அன்றாட அரசியல் தேவைகளுக்காகவே அரசாங்கம் பதில் தாக்குதல்களை நடத்துகின்றது. கிழக்கு மாகாணத்தை முழுமையாகக் கைப்பற்றி விட்டதாக அரசாங்கம் மார்தட்டிக் கொள்கின்றது.

அப்படியானால் மட்டக்களப்புச் சென்ற தூதுவர்கள் மீது எவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டது? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கஜந்த கருணாதிலக்க கேள்வி எழுப்பினார்.

புலிகளின் ஊடக இணைப்பாளர் தயா மாஸ்டரை கொழும்புக்கு அழைத்து வருவதற்கு உரிய பாதுகாப்பை வழங்கிய அரசாங்கம் தூதுவர்களுக்கு போதியளவு பாதுகாப்பினை வழங்கத் தவறிவிட்டது.

தூதுவர்கள் (04 ஆம் பக்கம் பார்க்க)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2007

(நேற்றைய தொடர்ச்சி)

## சூப்பர் 8 ஆட்டம்

| | | | |
|---|---|---|---|
| மார்ச் - 27 | இருபத்தைந்தாவது போட்டி | குழு டி 2: குழு ஏ 1 | ஆண்டிகுவா |
| மார்ச் -28 | இருபத்தாறாவது போட்டி | குழு ஏ 2 : குழு பி 1 | குயானா |
| மார்ச் -29 | இருபத்தேழாவது போட்டி | குழு டி 2 : குழு சி 1 | ஆண்டிகுவா |
| மார்ச்-30 | இருபத்தெட்டாவது போட்டி | குழு டி 1 : குழு சி 2 | குயானா |
| மார்ச்-31 | இருபத்தொன்பதாவது போட்டி | குழு ஏ 1 : குழு பி 2 | ஆண்டிகுவா |
| ஏப்ரல்-01 | முப்பதாவது போட்டி | குழு டி 2 : குழு பி 1 | குயானா |
| ஏப்ரல்-02 | முப்பத்தொராவது போட்டி | குழு பி 2 : குழு சி 1 | ஆண்டிகுவா |
| ஏப்ரல்-03 | முப்பத்திரண்டாவது போட்டி | குழு டி 1 : குழு ஏ 1 | குயானா |
| ஏப்ரல்-04 | முப்பத்திமூன்றாவது போட்டி | குழு சி 2 : குழு பி 1 | ஆண்டிகுவா |
| ஏப்ரல்-07 | முப்பத்தினான்காவது போட்டி | குழு பி 2 : குழு ஏ 2 | குயானா |
| ஏப்ரல்-08 | முப்பத்தைந்தாவது போட்டி | குழு ஏ 1 : குழு சி 2 | ஆண்டிகுவா |
| ஏப்ரல் -09 | முப்பத்தாறாவது போட்டி | குழு டி 1 : குழு சி 1 | குயானா |
| ஏப்ரல் -10 | முப்பத்தியேழாவது போட்டி | குழு டி 2 : குழு ஏ 2 | கிரேனடா |
| ஏப்ரல்-11 | முப்பத்தெட்டாவது போட்டி | குழு சி 2 : குழு பி 2 | பார்படோஸ் |
| ஏப்ரல்-12 | முப்பத்தொன்பதாவது போட்டி | குழு பி 1 : குழு சி 1 | கிரேனடா |
| ஏப்ரல்-13 | நாற்பதாவது போட்டி | குழு ஏ 1 : குழு டி 1 | பார்படோஸ் |
| ஏப்ரல்-14 | நாற்பத்தொராவது போட்டி | குழு ஏ 2 : குழு சி 1 | கிரேனடா |
| ஏப்ரல்-15 | நாற்பத்திரண்டாவது போட்டி | குழு பி 2 : குழு டி 1 | பார்படோஸ் |
| ஏப்ரல்-16 | நாற்பத்திமூன்றாவது போட்டி | குழு ஏ 1 : குழு பி 1 | கிரேனடா |
| ஏப்ரல்-17 | நாற்பத்தினான்காவது போட்டி | குழு ஏ 2 : குழு சி 2 | பார்படோஸ் |
| ஏப்ரல்-18 | நாற்பத்தைந்தாவது போட்டி | குழு டி 1 : குழு பி 1 | கிரேனடா |
| ஏப்ரல்-19 | நாற்பத்தாறாவது போட்டி | குழு டி 2 : குழு பி 2 | பார்படோஸ் |
| ஏப்ரல்-20 | நாற்பத்தெழாவது போட்டி | குழு ஏ 1 : குழு சி 1 | கிரேனடா |
| ஏப்ரல்-21 | நாற்பத்தெட்டாவது போட்டி | குழு டி 2 : குழு சி 2 | பார்படோஸ் |
| ஏப்ரல்-24 | நாற்பத்தொன்பதாவது போட்டி | முதல் அரை இறுதி போட்டி - இரண்டாவது இடம் : மூன்றாவது இடம் | ஜமைக்கா |
| ஏப்ரல்-25 | ஐம்பதாவது போட்டி | இரண்டாவது இரை இறுதி போட்டி முதலாவது இடம் : நான்காவது இடம் | சென்ட்லூசியா |
| ஏப்ரல்-28 | ஐம்பத்தொராவது போட்டி | இறுதிப்போட்டி | பார்படோஸ் |

(முற்றும்)

## நேர்முக விசாரணைக்கு தோற்றத் தவறியோருக்கு

போக்குவரத்து தடைப்பட்டு யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வெளிமாவட்டத்தில் கடமையாற்றும் வடக்கு மாகாண ஆசிரியர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்குமான தற்காலிக இணைப்பு வழங்குவதற்கான நேர்முக விசாரணையில் தோற்றத்தவறியவர்களுக்கான நேர்முக விசாரணை நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ்.பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் நடாத்தப்படும். தோற்றத் தவறிய அனைத்து உத்தியோகத்தர்களும் நேர்முக விசாரணைக்கு தோற்றும்படி யாழ். பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

## கொடுப்பனவு தொடர்பான கலந்துரையாடல்

யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ள வெளி மாவட்டங்களில் கடமையாற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான கொடுப்பனவை பெற்றுக் கொள்ளல் தொடர்பான கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.05 மணிக்கு யாழ்.கல்வி வலயத்துக்கு அருகாமையில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் இதுவரை கொடுப்பனவை பெற்றுக் கொள்ளாத உத்தியோகத்தர்கள் தங்களது விபரங்களுடன் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ச)

## தீர்த்தத் திருவிழா

கந்தர்மடம் சிவ உதயநாகபூசணி அம்பாள் ஆலய தீர்த்த திருவிழா இன்று காலை இடம் பெற்று பிற்பகல் 2மணிக்கு தீக்குளிப்பு இடம் பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை தெரிவித்துள்ளது. (ச-132)

## ஊர்காவற்றுறை சுகாதாரப் பிரிவில் குழந்தைகளுக்கு பால்மா விநியோகம்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்ட குழந்தைகளிற்கான அங்கர் 1+, 3+ பால்மா ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் கீழ் உள்ள வைத்திய நிறுவனங்களில் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளது. எதிர்வரும் 5ஆம் திகதி மண்டைதீவு வைத்தியசாலையிலும் மறுநாள் 6ஆம் திகதி புங்குடுதீவு வைத்தியசாலையிலும் விநியோகிக் கப்படவுள்ளது.

7ஆம் திகதி காரைநகர் சுற்றயல்கூறு வைத்தியசாலை, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலை, நாரந்தனை ஆரம்ப சுகாதார நிலையம், புளியங்கூடல் ஆரம்ப சுகாதார நிலையம், நயினாதீவு சுற்றயல்கூறு வைத்தியசாலை ஆகிய இடங்களில் வழங்கப்படவுள்ளது.

8ஆம் திகதி வேலணை கிராமிய வைத்தியசாலை, சரவணை ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றிலும், 12ஆம் திகதி அனலைதீவு சுற்றயல் கூறு வைத்தியசாலை, 14ஆம் திகதி நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை, 16ஆம் திகதி ஏழுவைதீவு ஆரம்ப சுகாதார நிலையம் ஆகியவற்றிலும் வழங்கப்படவுள்ளது. (ச)

## யாழ்ப்பாணத்தில் புண்ணிய கிராமத் திட்டம் இந்து கலாசார திணைக்களம் அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசாரத்திணைக்களத்தினால் யாழ்.மாவட்டத்தில் புண்ணிய கிராம திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக சமுக சேவைகள் அமைச்சின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் கே.தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

இத்திட்டம் தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, யாழ்ப்பாணத்துடன் வலிகாமம் இணைந்த நான்கு பிரதேச பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அங்குள்ள மக்கள் மத்தியில் சமய அறிவினை ஏற்படுத்தல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்குகளை நடத்துவதுடன் மத மாற்றத்தை தடை செய்வதற்கான நடவடிக்கைகளில் மேற்கொள்ளுதல் போன்ற செயற்திட்டங்களில் ஈடுபட்டுள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை இத்திட்டங்களை மேற்கொள் வதற்கான நடவடிக்கைகளில் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் பிரதேச செயலர்களும் இணைந்து செயற்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டம் முதற்கட்டமாக பின்தங்கிய பிரதேசங்களில் செயற்படுத்தப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-3)

## பயங்கரவாதத்தை அடியோடு ஒழிப்பதற்கு சர்வதேசத்தின் உதவி மிக முக்கியமானது

### சீனாவில் ஜனாதிபதி மகிந்த உரை

எமது நாட்டில் காணப்படுகின்ற பிரதான பிரச்சினை பயங்கரவாதமாகும். எனவே பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்து அனைத்து மக்களுக்கும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பது எமது அரசாங்கத்தின் பிரதான கடமையாகும்.

எமது இந்த முயற்சிக்கு சர்வதேச உதவி மிக முக்கியமானதாகும். நாங்கள் இன்று வரலாற்று ரீதியாக பயங்கரவாதத்தை தோற்கடித்து வருகின்றோம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் இராஜதந்திர தொடர்புகள் ஆரம்பிக்கப்பட்டு 50 வருடங்கள் நிறைவு பெறுவதனை முன்னிட்டு சீனாவில் இடம்பெற்ற சீன - இலங்கை நட்புறவு கலை நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

சர்வதேசம் முன் இன்று சீனா பலம் பொருந்திய நாடாக உள்ளது. 1940ஆம் ஆண்டு மக்கள் சீனா உருவாகியது. இந்நிலையில் இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் 1957 பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி இராஜதந்திர உறவுகள் ஆரம்பமாகின.

இன்று எமது நாட்டில் காணப்படுகின்ற பிரதான பிரச்சினை பயங்கரவாதமாகும். எனவே பயங்கரவாதத்தை அடியோடு ஒழித்து மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பது எமது அரசாங்கத்தின் பிரதான கடமையாகும் என்றார். (ச)

## நீதித்துறை தொடர்பான இணையத்தளம் பிரதம நீதியரசரால் திறந்து வைப்பு

(கொழும்பு)

இலங்கையின் நீதித்துறை தொடர்பாக மக்களுக்கு முழுமையான அறிவை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நீதிசார் தகவல்கள் அடங்கிய Law Net எனப்படும் இணையத்தளம் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவினால் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த வைபவம் திங்களன்று புதுக்கடையில் உள்ள நீதிமன்ற கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

உலக வங்கியின் நிதியுதவியுடன் நீதித்துறை மற்றும் சட்ட சீர்திருத்த அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சட்டம் மற்றும் நீதித்துறை சீர்திருத்த திட்டத்தின் கீழ் இலங்கையில் முதன்முதலாக இந்த இணையத்தளம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த இணையத்தளம் ஆரம்ப நிகழ்வில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா , சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் , நீதித்துறைசார் வல்லுநர்கள் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ச)


## சிறு விளம்பரம்

### விசேட கருத்தரங்கு

கிராம உத்தியோகஸ்தர் பரீட்சை

Science Hall சனி (இன்று) கன்னாதிட்டி ஞாயிறு 10-2.30

Subra சித்தன்கேணி சனி, ஞாயிறு திங்கள், புதன், வெள்ளி 3-5

(641)


## அரசியலிலிருந்து ஓய்வு பெற்ற பின் அநாதை இல்லத்தில் பணியாற்றுவேன்

### அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி

நாடடெங்கிலும் பல்வேறு காரணங்களால் அநேக சிறார்கள் தாய் தந்தையரை இழந்து அநாதரவாக வாழ்கின்றனர்.

அவர்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டி அரவணைப்பவர்கள் தமது சொந்தப் பிள்ளைகளின் சுபீட்ச வாழ்விற்கு அடித்தளமிடுகின்றார்கள் என அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

ஏறாவூர் மீராகேணி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள சிறுவர் பராமரிப்பு நிலைய மாணவர் விடுதிக்கான அடிக்கல் நாட்டுவிழா வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சுப் பதவியை பொறுப்பேற்றுள்ள நான் அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர் ஏதாவது ஒரு அநாதை இல்லத்திலேயே கடமையாற்றி அவர்களுக்காக பணி செய்ய திட்டமிட்டுள்ளேன் என்றார். (ச)

## பூரணை தின பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ இராம கிருஷ்ண சமிதியின் பூரணை தின பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று காலை 10மணிக்கு யாழ்.போதனா வைத்தியசாலை புற்று நோய் பகுதியில் இடம் பெறவுள்ளது. (ச)

## மஹோற்சவம்

(காரைநகர்)

காரைநகர் மணற்காடு முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறும். (ஏ)




வருசப் புலம் மகாமாரி அம்பாள்

மஹோற்சவம்

தீர்த்தத் திருவிழா

03.03.2007 சனிக்கிழமை

மஞ்சளணி குங்குமமும் மாலை யாட
மன்னுசெவிக் குண்டலங்கள் மின்னி ஆட
கஞ்சமலர் விழியருளைப் பொழிந்து ஆட
கரம்அபய வரதங்கள் கனிந்தே ஆட
கொஞ்சுதமிழ் இதழமுதில் இன்பம் பூக்க
குலவுமெழில் நகைபுரிந்து அருளும் தேவி
மஞ்சுலவு தலைவரியப் புலத்தில் மேவு
மனோகரியே மஹாமாரி ஆடீர் ஊஞ்சல்

(629)

எல்லா விசயங்களிலும் நல்ல அம்சத்தை கவனிக்கவே எப்பொழுதும் முயல், அனேகமாக ஒவ்வொரு விசயத்திலும் நல்ல அம்சம் உண்டு.

–ஆவ்பரி

வலம்புரி

# பாடப் புத்தகங்களுக்கான கட்டணம் அறவிடும் திட்டம்

இலவசமாக எதனைக் கொடுத்தாலும் அதற்கு பெறுமதி இருக்காது என்பது நடைமுறையுண்மை.

எனினும் மக்களுக்கான சில அத்தியாவசிய சேவைகளை இலவசமாக வழங்க வேண்டிய தேவை இருக்கவே செய்யும்.

உதாரணமாக மருத்துவ சேவையை எடுத்துக் கொண்டால் அதில் இலவச மருத்துவ சேவை என்பது அவசியமாகின்றது.

ஏழைகள் பாதிப்படைவதை தடுப்பதற்கு இலவச மருத்துவ சேவையை தவிர வேறு வழியில்லை என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

எனினும் கலாநிதி என்.எம்.பெரேரா நிதியமைச்சராக இருந்தபோது அரச வைத்தியசாலைகளின் வெளிநோயாளர் பிரிவில் மருந்தெடுப்பதற்கு முத்திரை ஒட்டி இரத்துச் செய்யும் நடைமுறை இருந்தது.

இருபத்தைந்து சதம், ஐம்பது சதம் என்ற மிகக் குறைந்த முத்திரையை ஒட்டுவதன் மூலமாகவே அரச வைத்தியசாலைகளில் மருந்தினைப் பெற முடிந்தது.

இதன்மூலம் இலவச மருந்து என்ற குறைந்த மதிப்பீடு கட்டுப்படுத்தப்பட்டதுடன் பெற்றுக் கொள்ளும் மருந்து வகைகள் வீணாக்கப்படாமலும் பாதுகாக்கப்பட்டது.

எனினும் காலப்போக்கில் 'முத்திரை' முறையும் நீக்கப்பட்டு முழுமையாக இலவச மருத்துவம் கொண்டு வரப்பட்டது.

இலங்கை ஒரு வறிய நாடாக இருக்கும் வகையில் இலவச மருத்துவ சேவை தேவையானதே. ஆனால் மாணவர்களுக்கான பாடபுத்தகம் என்ற விடயத்தில் 'இலவசம்' என்னும் சொற்பதம் எந்தளவு தூரம் பொருத்துடையது என்ற வாதப் பிரதிவாதங்கள் எழுவே செய்யும்.

அதாவது பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்கும்போது அந்த புத்தகங்களை பேணிப் பாதுகாப்பதில் மாணவர்கள் அசிரத்தை காட்டவே செய்கின்றனர்.

தமக்கு தரப்பட்ட புத்தகங்களை பாதுகாத்து மற்றைய மாணவர்களுக்கு வழங்க வேண்டும் என்ற உணர்வு மாணவர்களிடையே ஏற்படவில்லை. இந்த உண்மையை கடந்த கால அனுபவங்களில் இருந்து நாம் கற்றுக் கொள்ள முடியும்.

எனவே இலவச பாடப்புத்தகம் என்ற விடயத்தில் 'கட்டணம்' புகுத்தப்படுவது ஏற்புடையதே. ஆனால் அந்த கட்டணம் மாணவர்களுக்கு சுமையாகவோ , ஏழை மாணவர்களுக்கு பாதிப்பாகவோ இருக்கக்கூடாது என்பது மிகத்தெளிவாக இருப்பது கட்டாயமானதாகும்.

எனவே இதற்கு ஓர் பொருத்தமான வழிமுறையை பின்பற்ற வேண்டும். உதாரணமாக ஓர் புதிய பாடப்புத்தகத்தின் விலை நூறு ரூபாவாயின், அதனை அந்த விலையில் பெற்றுக் கொள்ளும் மாணவன் குறித்த புத்தகத்தை பேணிப் பாதுகாப்பதன் மூலம் மீளவும் எண்பது ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும்.

இத்திட்டத்தை அறிமுகம் செய்வதன் மூலம் ஒரு புத்தகத்திற்கான ஒரு வருட செலவாக ஒரு மாணவன் இருபது ரூபாவையே செலவிடவேண்டியதாகவிருக்கும்.

இந்த தொகை அந்த மாணவனை பாதிக்காது என உறுதிபட கூறமுடியும். எனவே இலவச பாடப் புத்தகங்களின் பாவனைக் காலத்தை நீடிக்கவும் மாணவர்கள் அவற்றை பேணவும், வேண்டுமாயின் மேற்போந்த முறையை கடைபிடிக்கலாம்.

இதற்கு முன்னதாக அடிக்கடி பாடத்திட்டத்தை - பாடப்புத்தகத்தை மாற்றுவதற்கு முற்றுப்புள்ளி வைப்பது அவசியமாகும்.

# அரசாங்கத்தின் வெற்றிப் பெருமிதத்தை மட்டு. தாக்குதல் முடிவுக்கு கொண்டு வந்தது

## ஜேர்மனிய நாளேடு செய்தி வெளியீடு

மட்டக்களப்பை விட்டு விடுதலைப்புலிகளை விரட்டியடித்து விட்டோம் என்ற அரசின் கூற்று பொய் என்பது வெட்ட வெளிச்சமாகிவிட்டது. வெளிநாட்டு இராஜதந்திரிகள், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புப் படைகள் வெற்றிப் பாதையில் வீறுநடை போடுகின்றனர் என்ற கூற்றை கூட சிறிதளவும் மெய்யென்று நம்பமுடியாமல் செய்து விட்டது.

இவ்வாறு ஜேர்மனியில் வெளியாகும் நாளேடுகளில் ஒன்றான General - Anzeiger கடந்த புதன்கிழமை வெளியிட்ட செய்தியில் இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பில் உள்ள வெபர் விளையாட்டு மைதானத்தில் உலங்கு வானூர்தியில் இருந்து இறங்க முற்பட்டவேளை இடம்பெற்ற ஏறிகணை வீச்சுத் தாக்குதலில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் காயமடைந்த செய்தி பற்றி எழுதும் போதே அந் நாளேட்டின் செய்தியாளர் இவ்வாறு எழுதியுள்ளார்.

அந்நாளேட்டின் செய்தியாளர் வில்லி கோர்முண்ட் முதலில் வெற்றிப் பெருமிதமும் பின்னர் தலைக்குனிவும் எனத் தலைப்பிட்டும் இராஜதந்திரிகள் மீதான தாக்குதலில் அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பு நிலைவரம் பற்றி அழகாகப் பேசுகிறது என்று தெரியவந்துள்ளது.

2002இல் கைச்சாத்திடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் தற்போது மீறப்பட்டவிட்டது. கடந்த வருடத்தில் மட்டும் 4ஆயிரம் பேர் மீண்டும் மூண்ட போரில் உயிரிழந்துள்ளனர். இலங்கையின் வடபகுதியிலுள்ள வவுனியா நகரம் மனித நடமாட்டம் இன்றி வெறிச்சோடி உள்ளது.

ஏனெனில் பல்லாயிரக்கணக்கான குடிமக்கள் படையினர் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சத்தால் உயிரைக் கையில் பிடித்தபடி வெளியேறியுள்ளனர். இராணுவ நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் நோர்வேக்குழு ஒன்று கூட வவுனியாவை விட்டு வெளியேறியுள்ளது.

கடந்த வாரங்களில் தென்கிழக்குப் பகுதியில் தமது நிலைகள் மீது இராணுவம் தாக்குதல் தொடுத்த போது விடுதலைப்புலிகள் சுழித்துக் கொண்டு தப்பிவிட்டனர். பாகிஸ்தானிய ஆலோசகர்களின் வழிகாட்டலுடன் பறந்த வான்படை விமானம் விடுதலைப்புலிகளின் நிலைகள் மீது தாக்குதலை நடத்தியது.

படையினரின் வெற்றியும் விடுதலைப்புலிகளின் தற்காப்பு பின்வாங்கல் நடவடிக்கைகளும் கொழும்பில் உள்ள அரசின் வெற்றிப் பெருமிதத்தை இந்த இராஜதந்திரிகள் ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதிகள் அடங்கிய உலங்கு வானூர்தி மீதான தாக்குதல் முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

இருந்தபோதிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தமிழர்களை விடுதலைப்புலிகளிடமிருந்து விடுவிப்பதற்கு முயற்சிப்பதான தனது கூற்றை அப்படியே தொடர்ந்தும் கூறிக் கொண்டிருக்கலாம். இராணுவ வெற்றி அல்லது இராணுவ ஆலோசனை மூலம் விடுதலைப்புலிகளை பேச்சுவார்த்தை மேசையில் தனது நிபந்தனைகளுக்குக் கட்டுபட வைக்கலாம் என்று அவர் நினைக்கிறார்.

விடுதலைப்புலிகள் கடந்த வாரத்தில் 2002இல் செய்யப்பட்ட போர் நிறுத்தத்தில் இனியும் தாம் பிணைக்கப்பட்டிருப்பதாக உணரவில்லை என்றும் தாயகம் வேண்டிய ஆயுதம் தாங்கிய போராட்டத்தை மீண்டும் கையில் எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. முதல் தடவையாக ஜேர்மனிய நாளேடு ஒன்று வழமைக்கு மாறாக இவ்வாறு எழுதியுள்ளமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச-5)

# பல்கலை மாணவர் இலக்கு வைக்கப்படுவதை நிறுத்துமாறு மாணவர் ஒன்றியம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் இலக்கு வைக்கப்பட்டு கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நேற்று மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையிலேயே இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பல்கலைக்கழகத்தின் சீரான செயற்பாடுகள் காரணமாக வெறுப்புக் கொண்ட தரப்பினால் எமது மாணவர்கள் தொடர் இலக்கு வைத்து கொல்லப்படுவதும், கைது, கடத்தலுக்கு உள்ளாவதும் தொடரும் நிகழ்வுகளாகவுள்ளன.

இதன் தொடராக நேற்று முன்தினம் எமது கலைப்பீட இரண்டாம் வருட மாணவன் செல்வரத்தினம் சிவரஞ்சன் நித்திரையில் வைத்து ஊரடங்கு வேளையில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். எமது மாணவர்களின் கொலைகள் அனைத்தும் பாதுகாப்பு வலயங்களாக பேணப்படும் சூழல்களிலேயே நடைபெற்றுள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களின் பாதுகாப்பு எந்த விதமான உத்தரவாதமும் அற்ற நிலையிலேயே நாம் எமது கல்விச் செயற்பாடுகளை இழப்புக்கள் மத்தியிலும் தொடர்ந்து வருகின்றோம்.

அரச கட்டுப்பாட்டுப்பகுதியில் இராணுவப் பிரசன்னத்தின் மத்தியிலேயே எமது மாணவர்கள் கற்று வருவதானால் பாதுகாப்பு ரீதியாக விளையும் அச்சுறுத்தல்கள் அனைத்துக்கும் அரச தரப்பினரே கவனமெடுத்து செயற்பட வேண்டுமென தொடர்ச்சியாக கோரி வருகின்றோம்.

வன்முறைகள் அற்ற கல்வி நடவடிக்கைளையே குறிக்கோளாகக் கொண்டு செயற்பட்டு வரும் எமது மாணவர்களின் சிந்தனைத்தளத்தில் ஏற்படும் மாற்றங்கள் அவர்களது விரக்தியுடன் வெளிப்பாடாக அமைவது எதிர்காலத்தை மேலும் நெருக்கடி மிக்கதாகவே மாற்றும். எனவே எமது மாணவனின் கொலையை கண்டிக்கும் அதேவேளை இனி வரும் நாள்களில் மாணவர்களை இலக்காக்கும் நிலை தவிர்க்கப்பட வேண்டுமெனவும் கேட்டு நிற்கின்றோம் என்றுள்ளது. (ச)

# நேர்வேயை வெளியேற்றுவது அரசுக்கு பாதகமான நிலையை ஏற்படுத்தும்

## அவுஸ்திரேலியாவில் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா

(மெல்போன்)

போர்நிறுத்த உடன்படிக்கையை கிழித்தெறிவதும், சமாதான செயற்பாடுகளின் ஏற்பாட்டாளரான நோர்வேயை வெளியேற்றுவதும் இலங்கை அரசாங்கத்துக்கு சர்வதேச மட்டத்தில் பாதகமான நிலைமையை தோற்றுவித்துவிடும் என்று அவுஸ்திரேலியாவுக்கு விஜயம் செய்துள்ள சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

மெல்போனில் அண்மையில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியதாவது,

நோர்வேயை வெளியேற்றக் கோருவதும் போர் நிறுத்த உடன்படிக்கையை கிழித்தெறிய கூறுவதும் குஷியான விடயங்களாகும். ஆனால் நடைமுறைச்சிக்கலை நாம் உணர வேண்டும்.

யுத்தம் செய்ய வேண்டுமானால் யுத்த விமானங்கள், ஆயுதங்கள் என்பன தேவையாகும். ஆயுதங்களை பெற்றுக் கொள்வதற்கு நாங்கள் வெளிநாடுகளுக்குச் சென்று மண்டியிட வேண்டியிருக்கும். ஜே.வி.பி. கூறுவது போன்று உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற கைத் துப்பாக்கிகளை வைத்து யுத்தம் செய்ய முடியாது.

இவ்விடயங்கள் தொடர்பாக ஜே.வி.பியினருக்கு தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. இல்லாவிடின் ஜே.வி.பியினர் கிணற்றுத் தவளைகள் போன்று கருத்துக்களை தெரிவிப்பார்கள்.

ஜனாதிபதி இவ்விடயம் தொடர்பாக நடைமுறைக்கு ஏற்ற வகையில் அமைச்சரவையுடன் விரிவாக கலந்துரையாடி தீர்மானங்களைஎடுத்து வருகின்றார். போர் நிறுத்த உடன்படிக்கைகள் சர்வதேச மட்டத்தில் எமது நாட்டுக்கு சாதகமாக அமையாது. (ச)

# மீன்பிடித் தடையால் தீவக மீனவர்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

மீன்பிடித் தொழிலுக்கு கடற்படையினரால் அனுமதி மறுக்கப்பட்டு[illegible]தால் தாம் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்குவதாக தீவக கடற்றொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொ[illegible]பாக தீவகப்பகுதியைச் சேர்ந்த ஐந்து கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் தம்மிடம் முறையிட்டுள்ளதாகவும் அவர்களை கடற்றொழிலுக்கு அனுமதிப்பது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் ஈ.பி.டி.பி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-3)

# கல்விச் சமூகத்தினர் மீதான தாக்குதல் கிளிநொச்சியில் துக்கதினம் அனுஷ்டிப்பு

மன்னாரில் தமிழீழ விடுதலைப்புலிக ளின் நிர்வாகப் பகுதிகளில் கல்விச் சமூகத் தின் மீதான கிளைமோர்த் தாக்குதல்களைக் கண்டித்துக் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு வலயப் பாட சாலைகளில் நேற்றுத் துக்கம் கடைப்பிடிக் கப்பட்டது.

பாடசாலைகள் தோறும் கறுப்புக் கொடி கள் பறக்க விடப்பட்டன. பாடசாலைகளில் துக்க இசை ஒலிக்கவிடப்பட்டன. மாணவர் களுக்கு ஆதரவாக வர்த்தக நிலையங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வி நிலையங்கள்என்பன துக்க நிகழ்வுக்கு ஆத ரவு தெரிவித்துள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு, மாங்குளத் தில் கல்விச் சமூகத்தின்மீதான தாக்குதலைக் கண்டித்து நேற்று முற்பகலில் கண்டனப் பேரணி நடைபெற்றது.

மாங்குளம் சந்தியிலிருந்துஆரம்பமான கண்டனப் பேரணி துணுக்காய் வலயக் கல் விப்பணிமனையைச் சென்றடைந்து மனுக் கள் கையளிக்கப்பட்டுள்ளன. (எ-1)

# சுடப்பட்ட மாணவனுக்கு பல்கலையில் அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் சுட்டுக் கொல்லப்பட்ட யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவன் செல்வரத்தினம் சிவரஞ்சனுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நேற்று மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் விரிவுரைகளுக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதுடன் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கின் முன்னுள்ள பொதுமண்டபத்தில் ஒன்று கூடி இறந்த மாணவனுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் உண்ணாவிரதப் போராட் டத்திலும் ஈடுபட்டனர்.

மாணவர் ஒன்றியத்தின் தலைமையில் நடைபெற்ற இவ் அஞ்சலி நிகழ்வில் யாழ். பல்கலைக்கழகப் பதில் துணைவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேல் மற்றும் விரிவு ரையாளர்கள், ஊழியர்கள் எனப் பலதரப்பட் டவர்கள் கலந்து கொண்டனர்.

இதேவேளை இச் சம்பவத்தினைக் கண் டித்து அடுத்த வாரம் துக்கதினம் அனுஷ் டிக் கவும் மாணவர்கள் முடிவு செய்துள்ளனர்.(ச-3)

## கிழக்கை...

மீதான தாக்குதலுக்கு அரசாங்கமே பொறுப் பேற்க வேண்டுமென்றும் அவர் கூறினார். எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநா ட்டில் கருத்துத் தெரிவித்த போதே கஜந்த கருணாதிலக்க எம்.பி. இவ்வாறு கூறினார்.

வட.கிழக்கில் 4 சதவீத நிலப்பரப்பைக் கொண்ட யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவ தற்காக கிழக்கு மாகாணத்தில் பல பிரதேசங் களை அப்போதைய அரசாங்கம்இழந்தது.

காரணம் அரசியல் கோட்பாட்டின் அடிப் படையில் யுத்தம் செய்யப்பட்டமையாகும். ஆனால் தற்போதைய அரசாங்கம் அனை த்து விடயங்களையும் யுத்தத்தின் பின்னால் மறைத்துள்ளது.யுத்த வெற்றிகளை அரசியல் வெற்றிகளாக அரசாங்க ஊடகங்கள் வெளிக்காட்டுகின்றன. நாடும் முழுவதும் சுவ ரொட்டிகளை ஒட்டுகின்றனர் என்றார். (ச)

## பல்கலைக்...

தொடர்பில் பாதுகாப்பு அமைச்சருடனும் பல்கலைக்கழக நிர்வாகத் திடமும் தாம் தொடர்பு கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள் ளது.

எழுத்து மூலமான கோரிக்கையை யாழ். மாவட்ட இராணுவத் தளபதிக்கும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் அனுப்பி வைத்துள்ள போதிலும் இதுவரையும் சாதக மான பதில் எதுவும்தமக்குக் கிடைக்கவில்லை எனக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது. (எ)

## தமிழகத்திலிருந்து புலிகள்...

பொருள்களைக் கடத்தும் முயற்சிகள் சில வற்றைத் தாம் முறியடித்துள்ளதாக இந் தியக் கடற்படையும் கடலோரக் காவற்படையும் கூறிவருகின்றன. இலங்கைக்குக் கடத்தப் படவிருந்த மூலப் பொருள்கள் பல கைப்பற் றப்பட்டன.

ஆனால் இந்தச் சம்பவங்களுக்கும் விடு தலைப்புலிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங் கம் சென்னையில் செய்தியாளர்களிடம் தெரி வித்தார்.

இதை விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தன்னிடம் நேரடியாகத் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் பல பொருள்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் பல ஆண்டுகளாகக் கடத்தல் நடைபெற்று வருவதாகத் தெரிவித்த சிவாஜிலிங்கம், இப்பொருள்கள் இலங்கை க்குக் கொண்டு செல்லப்படுவதாகவும் கூறி னார். (ச)

## தமிழக...

வேண்டும் என்று தான் கருணாநிதியிடம் வலியுறுத்தியதாக ஆனந்தசங்கரி தெரிவித் துள்ளார்.

தனிநாடு கோரிக்கை என்பதை சர்வதேச சமூகமும் இந்தியாவும் ஏற்காது என்பதால் இந்தப் பிரச்சினைக்குச் சமஷ்டி அடிப்படை யில் தீர்வுகாணப்படவேண்டும் என்று தான் கருணாநிதியிடம் வலியுறுத்தியுள்ளதாக மேலும் கூறினார். (எ)

## வவு.உயர்...

தளமும் அடங்கிய யோசப் தளத்துக்கு முன் பாக அதிஉயர் பாதுகாப்புக்களுடன் ஈரப் பெரியகுளம் புகையிரதநிலையம் உள்ளது.

தெற்கு நோக்கிப் பயணிப்பவர்கள் சோத னையிடப்படும் முதன்மைச் சோதனை நிலையம் ஈரப்பெரியகுளம் ஏ-9 சாலையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-5)

## மேலதிக...

கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பின்போது மட்டக்களப்புத் தாக்குதல் குறித்து அரசாங்கத்தின் சார்பாக வெளிவிவகார அமைச்சர் தமது ஆழ்ந்த கவலையையும் வெளியிட்டார்.

இதேவேளை வெளிநாட்டுத் தூதுவர்க ளின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட அரசு அவர்களுக்கான மேலதிக பாதுகாப் பை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளதா கக் கூறப்பட்டது. (ச-3)

## இந்திய...

பிரிவில் இலங்கைக்கு 28 கோடி ரூபா அனு மதிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலிருந்து தமிழகம் சென்று அகதிமுகாம்களில் தங்கி யுள்ள இலங்கைத் தமிழர்கள் நலனுக்காக 17 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (ச)

## வரணி...

கமத்தொழில் செய்து வரும் இவ் இளை ஞன் நித்திரையில் இருந்த சமயம் அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுததாரிகள் அவரைச் சுட்டு விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைக ளைச் சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர் மேற்கொண்டார்.

இதேவேளை நேற்று முன்தினமிரவு 10.30 மணியளவில் அரியாலை கனகரத் தினம் வீதியில் வைத்து வர்த்தகர் ஒருவர் சுட் டுக் கொல்லப்பட்டுள்ளார்.

அதேஇடத்தைச் சேர்ந்த மாணிக்கம் மனோகரன் (வயது-44) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார். இவரது மரணம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட பதில் நீதிவான் கேசவன் பிரேத பரிசோதனையின் பின் சடலத்தை உறவினர் களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.(ச-5)

## 332 இலங்கை அகதிகள் திருவண்ணமலையில்

(சென்னை)

97 குடும்பங்களைச் சேர்ந்த 332 இலங் கையர்கள் திருவண்ணமலை மாவட்ட புதுப் பாளையத்திற்கு வந்தடைந்துள்ளதாக இந்தி யச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களுள் 132 ஆண்களும் 46 சிறு வர்களும் 107 பெண்களும் 47 சிறுமிகளும் அடங்குகின்றனர். இவர்களுக்கான தங்கு மிட வசதிகளை அரசாங்கம் சந்தைப்பகுதி அருகே ஏற்பாடு செய்து கொடுத்துள்ளது.

இவர்களுக்கான வீடுகளை 14 அகதி முகாம்களில் நிர்மாணிக்க அரசாங்கம் எண் ணியுள்ளது என இந்திய அதிகாரிகள் தெரி வித்துள்ளனர். (ச)

## தொப்பிக்கல...

டுள்ளதாக இராணுவப்பேச்சாளர் பிரிகே டியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

தொப்பிகல நரக்கமுல்லையிலுள்ள முகாம்களில் பெரும் எண்ணிக்கையிலான விடுதலைப்புலிகள் ஒன்று கூடியிருந்தபோதே மிக்-27 ரக போர் விமானம் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக அவர் மேலும் கூறினார்.

பல்குழல் பீரங்கிகளைப் பயன்படுத்தி சுமார் 45 நிமிடங்கள் தொடர்ந்தும் அப் பகுதி யில் வைத்து இராணுவத்தினர் தாக்கியுள்ள தாகவும் இத்தாக்குதலில் 31 விடுதலைப்புலி கள் காயமடைந்துள்ளதாகவும் அவர்களின் முகாம்களுக்கு பாரிய சேதம் ஏற்பட்டுள்ள தாகவும் மேலும் கூறினார். (ச-3)

## இராஜதந்திரிகளின்...

மைகள் உறுதியற்ற பிரதேசத்திற்கு எமது நான்கு நட்பு நாடுகளின் பிரதிநிதிகளை அழைத்துச் சென்றது அரசின் பொறுப்பற்ற தன்மையைக் காட்டுகின்றது. இதன் முழுப் பொறுப்பும் பாதுகாப்பு அமைச்சையே சாரும்.

நாட்டின் தற்போதைய உண்மை நிலை தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர் மக்க ளுக்குத் தெரிவிக்க வேண்டும். இராஜதந்திரி கள் மற்றும் அமைச்சர் மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதலை நாம் கண்டிக்கின் றோம்.

படையினரின் உயிர்த்தியாகங்களின் மத்தியில் இடம்பெற்று வரும் போரானது சில ரின் அரசியல் நிகழ்ச்சி நிரலின்படி நடத்தப் படுகின்றது. இது தொடர்பாக நான் ஆழ்ந்த வருத்தமடைகின்றேன். ஊடகங்களின் பரப் புரைகளினால் களத்தின் உண்மை நிலை மறைக்கப்படுகின்றது.

நான் துறைமுகங்கள் சிவில் போக்குவர த்து அமைச்சராக இருந்த சமயத்தில் மகிந்த வின் இந்த நெருங்கிய உறவினர் தமக்குப் பிடிக்காத சில பத்திரிகைகளுக்கு விளம்பரங்க ளைக் கொடுக்க வேண்டாம் எனவும் அதிகா ரிகளை மிரட்டியிருக்கின்றார் என்றார். (எ-5)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 21 03 1945



மறைவு 01 02 2007

அமரர் எஸ்.ரி.கணநாதன் அவர்கள்

(ஓய்வு பெற்ற மின் அத்தியட்சகர்)

ஆண்டு விய வருடம் அம்புலி நிறை நாள்
பூண்ட சதுர்த்தசி தைப் பூசம் நன்னாளில் – கணநாதன்
நீண்ட சேவையாற்றி நித்தம் இறை தொழுது
யாண்டும் போற்ற சேர்ந்தார் மாரி அம்மன் சேவடி

எமது குடும்பத் தலைவர் அகால மரணமடைந்த போது பலவிதத்திலும் உதவிகள் புரிந்தோருக்கும், பத்திரிகை வாயிலாகவும், தொலை பேசி மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்த வர்களுக்கும் மலர் வளையம் சாத்தி அஞ்சலி செலுத்தியோருக்கும், இரங்கல் உரைகள் மூலம் அவரின் தன்னலமற்ற சேவைகளை எடுத்துக் காட்டியவர்களுக்கும் எமது நன்றியறிதலை தெரிவித் துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அரியாலை,
யாழ்ப்பாணம்.
03.03.2007

~குடும்பத்தினர்

[C~627]


## சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு...

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர் பதற்குஇராணுவத் தீர்வு சாத்தியமற்றது என்ற எமது நிலைப்பாடானது கடந்த செவ் வாய்க்கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்ற தாக்குதலின் மூலம் மாற்றமடையப் போவ தில்லை என்று அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற மோட்டார் எறிகணை வீச்சுத் தாக்குதலில் மயிரிழை யில் உயிர் தப்பிய பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வர்த்தக நிர்வாக முதுமாணிப் பிரிவினரின் பழைய மாணவ சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரை யாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

தாக்குதலின் பின்னர் ஹெலஉறுமயவி னால் விடுக்கப்பட்ட அறிக்கையில், அமெரிக் கத் தூதுவர் இத் தாக்குதல் மூலம் பாடம் கற்க வேண்டும் எனவும் விடுதலைப்புலிக ளைத் தேற்கடிக்க ஒரே வழி இராணுவத்தீர்வு தான் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டு மெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் அதனை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது. இதுஒரு வழியல்ல. இரா ணுவத் தீர்வு இதற்கு வழியாகாது. இரு தரப் புக்களும் ஒன்றாகச் சேர்ந்து அரசியல் தீர் வைக் காண வேண்டும் என்பதே அமெரிக் காவின் நிலைப்பாடு.

சுதந்திரக் கட்சியினால் வழி நடத்தப்படும் அரசு அதன் அதிகாரங்களை, தமிழ் மக் களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் விதமாக பகிர்ந்தளிக்க வேண்டும். அதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவுதர வேண்டும்.

அமைதியை ஏற்படுத்த வேண்டிய அதி காரம் அரசுக்குண்டு. எனவே அவர்கள் பாரம் பரிய எல்லைக்கோடுகளைத் தாண்டி அதை அடைய வேண்டும்.

தமிழ் மக்களின் தேவைகளை நிறைவு செய்யக் கூடிய தீர்வுக்கு ஐக்கிய தேசியக் கட் சியும் தனது ஆதரவை வழங்கவேண்டும் என்றார் அவர். (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.